**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 110/ந/2022
நாள். 13.09.2022

திரு. G. ரங்கநாதன்,
கொமாரபாளையம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கொமாரபாளையம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம், பூர்ணமதி பள்ளி அருகில், கொத்துக்காரன்காடு, கதவு எண் 2A3/1E என்ற முகவரியில் வசிக்கும் திரு.G.ரங்கநாதன் என்பவரின் 25.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.07.2022 அன்று பெறப்பட்டு 110/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம், பூர்ணமதி பள்ளி அருகில், கொத்துக்காரன்காடு, கதவு எண் 2A3/1E என்ற முகவரியில் வசிக்கும் திரு.G.ரங்கநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் நகராட்சியில் 32வது வார்டு நகர்மன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாக உள்ளேன். கொமாரபாளையம் நகராட்சியில் அறிவிக்கப்படும் ஏலங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் முறையாக கையாளப்படுவதில்லை. நகராட்சி மூலம் அறிவிக்கப்படும் ஒப்பந்தங்கள் நகர்மன்ற உறுப்பினர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் முறையான அறிவிப்பு ஏதும் வழங்குவதில்லை. ஒரு சாரார் பயன்பெற வழிவகுக்கப்படுவது மட்டுமின்றி நகராட்சிக்கும் வருவாய் இழப்பு ஏற்படுத்துகிறார்கள்.

பேருந்து நிலையத்தில் சைவ அங்காடி ஏலத்தில் ஒருசாராருக்கு சாதகமாக வழங்கவேண்டி ரூ 33,500/–க்கு வாடகைக்குவிடவேண்டிய கடையை 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கணவர் திரு.வெங்கடேசன் என்பவருக்கு ரூ 17,200/– க்கு முறைகேடாக டெண்டர் விட்டதை நாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் மன்றத்தில் உள்ளிருப்பு போராட்டம் செய்து டெண்டர் இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி ஏலம் வைத்து அதை 33,000/– ரூபாய்க்கு ஏலம் எடுத்தார்.

கிட்டதட்ட மாதம் ரூ 16,000 x 12 = 1,92,000/– ரூபாய் இழப்பை ஏற்படுத்த இருந்ததை நாங்கள் தடுத்தோம். மேலும் அதே நகர்மன்ற உறுப்பினரின் மகனான திரு.கோகுல் என்பவர் பேருந்து நிலையத்தில் ரூ 7,000/– வரை வாடகை வரவேண்டிய இடத்தில் ரூ.4,800/–க்கு மற்றொரு கடையை ஏலம் எடுத்துக்கொண்டார். மற்றொரு நகர்மன்ற உறுப்பினரின் மகனும் கொமாரபாளையம் நகராட்சியில் ஏலம் எடுக்கிறார்.

உதாரணமாக 15.06.2022 அன்று பல்வேறு வேலைகளுக்காக கொமாரபாளையம் நகராட்சி சார்பில் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் ஒரு நகர்மன்ற உறுப்பினரான எனக்கும், இன்னும் பல்வேறு நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் எந்தவித முன்னறிவிப்பும் கொடுப்பதில்லை. அதுமட்டுமின்றி கொடுக்கப்படும் வேலைகளும் தகுதியில்லாத ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தங்கள் ஒதுக்கப்படுகிறது. குறிப்பாக 15.06.2022 அன்று விடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் 50%க்கு மேல் 20வது வட்ட நகர்மன்ற உறுப்பினரான திருமதி. வள்ளியம்மாள் என்பவரின் மகன் திரு. ஞானசேகரனுக்கு சொந்தமான ஸ்ரீ சாய் டிரேடர்ஸ் என்ற புதிய, எந்தவித முன் அனுபவமும் இல்லாத கவுன்சிலரின் மகன் என்ற ஒரே காரணத்திற்காக அந்த நிறுவனத்திற்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

கொமாரபாளையம் நகராட்சியில் அடுத்தடுத்து வரக்கூடிய ஒப்பந்தங்கள் அனைத்தும் யாருக்கும் தகவல் கொடுக்காமல் சாய் டிரேடர்ஸ் என்ற அனுபவம் இல்லாத நிறுவனத்திற்கே செல்வது அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் சந்தேகத்தை உண்டாக்குகிறது. நகராட்சி நிர்வாகத்தை கட்டிகாக்க வேண்டிய மக்களால் தேர்வுபெற்ற நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சியை கூறுபோட்டு ஆளாளுக்கு ஏலம் எடுத்து பலன்பெறுகிறார்கள். வேலியே பயிரைமேய்ந்த கதையாய் காக்க வேண்டியவர்களே கயமைத்தனம் செய்கிறார்கள் இதற்கு ஆணையாளர் உடந்தையாய் உள்ளார். மேலும் முறைகேடாக நகர்மன்ற உறுப்பினர்களின் இரத்த உறவுகள் மூலம் எடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். எனவே தாங்கள் இந்த புகார் மனுவின் மீது உடனடி விசாரணை செய்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் ஆணையாளர் பொறுப்பிற்கு தகுதியற்ற கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.விஜயகுமார் அவர்கள் மீது தக்கநடவடிக்கை எடுக்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 01.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் கொமாரபாளையம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் தனது 25.08.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“கொமாரபாளையம் நகராட்சி ஆணையாளர் திரு.இரா.விஜயகுமார் பணிமாறுதல் காரணமாக 22.08.2022 பிற்பகல் முதல் கொமாரபாளையம் நகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். மேலும், நகராட்சி பொறியாளராகிய நான் 22.08.2022 பிற்பகல் முதல் ஆணையாளர் பொறுப்பினை ஏற்று வகித்து வருகிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொமாரபாளையம் நகராட்சியில் அறிவிக்கப்படும் அனைத்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளையும் நகராட்சியின் அறிவிப்பு பலகையில் அனைவரும் அறியும்வண்ணம் ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஏற்கனவே கடையினை ஏலம் எடுத்தவர்களுக்கும் வழங்கப்பட்டது. மேற்படி உணவகங்கள் 2019 முதல் தொடர்ந்து ஏலம் விடப்பட்டு வருகிறது. மூன்று வருடங்களாக ஏலம் விட்டும், ஒருவரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. இறுதியாக 17.05.2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் இருவர் கலந்துகொண்டு ஒருவர் ஏலம் கோராமலும் மற்றொருவர் ரூ 12,000/– ஏலம் கோரினார். ஒப்பந்த புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டு ரூ 17,100/– க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கினார். மேற்படி அசைவ உணவகத்திற்கு ரூ 17,000/– ரூ 19,000/– என இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் பேருந்து நிலைய நான்கு கடைகளுக்கு தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்றன. உணவகங்களுக்கான தொகை குறைவாக இருந்ததால் மேற்படி உணவகங்களின் ஏல அறிவிப்பினை மீண்டும் தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டு 23.06.2022 ஆம் தேதியன்று மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டு பேருந்து நிலைய உணவகங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் 17.05.2022 அன்று ஏலத்தில் கலந்து கொண்டவர்களே இதிலும் கலந்து கொண்டு சைவ உணவகத்திற்கு ஏலத்தில் ஒருவர் மட்டும் ரூ 21,000/– ஏலத்திலும் ரூ 33,000/– ரூ 27,500/– என இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், அசைவ உணவகத்திற்கு ரூ 25,000/–, ரூ 27,000/– மற்றும் ரூ 27,500/– என மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

எனவே, 29.06.2022 அன்று அதிகபட்ச ஏலக்கேள்வி ஒப்பந்தப்புள்ளி கொடுத்த நபர்களுக்கு மன்ற அனுமதியுடன் ஏலம் உறுதி செய்யப்பட்டது. இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை. 17.05.2022 அன்று நடத்தப்பட்ட ஏலத்திற்கு மீண்டும் 23.06.2022–ல் நடத்தப்பட்டு உயர்ந்தபட்ச ஏலம் கோரியவருக்கு உணவகங்களை ஒப்படைக்க உத்தரவு வழங்கப்பட்டது. இதில் வருவாய் இழப்பு ஏதுமில்லை.

ஏல அறிவிப்பானது அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய வகையில்தான் விளம்பரப்படுத்தப்பட்டது. எனவே இதில் வெளிப்படையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கலந்து கொண்டவர்கள்தான் ஏலக் கேள்வி கோரியுள்ளனர்.

மேலும் 27.05.2022, 15.06.2022 ஆம் தேதியன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு அலுவலக விளம்பரப்பலகையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் நகர்மன்றத் தலைவர் அவர்களுக்கும், நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் நகல் வழங்கப்பட்டது. மேலும் 15.06.2022 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய பணிகள் அனைத்தும் நகர்மன்ற கூட்டத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டு அனைத்து பணிகளுக்கும் பணி உத்தரவு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் 27.05.2022 அன்று 20 பணிகளும், 15.06.2022 அன்று 2 பணிகளுக்கும் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் ஸ்ரீ சாய் டிரேடர்ஸ் என்ற நிறுவனம் ஐந்து பணிகளை (அங்கன்வாடி கட்டிடம் பராமரிப்பு பணிகள்) மட்டும் எடுத்து பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் எவ்வித முறைகேடும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கொமாரபாளையம் நகராட்சி ஆணையரும் 29.08.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.08.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. ரங்கநாதன் 29.08.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாமல், ''ஆணையாளர் திரு. விஜயகுமார் பணியிடமாறுதல் பெற்று சென்று விட்டார்''

என்றும், அதனால் நான் அவர் மீது அளித்த புகாரை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்'' என்றும் தமது கடித்தத்தின் மூலம் முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான கொமாரபாளையம் நகராட்சியில் நகராட்சிப் பொறியாளராகவும் மற்றும் நகராட்சி ஆணையாளர் பொறுப்பில் பணிபுரியும் திரு.எ.ராஜேந்திரன் 29.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கொமாரபாளையம் நகராட்சியில் நடத்தப்படும் அனைத்து ஒப்பந்தங்களுக்கு அறிவிப்புகளை அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்படுகிறது. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள உணவகங்கள் 2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஏலம் விடப்பட்டு வருகிறது. கொமாரபாளையம் பேருந்து நிலையத்தில் சைவ மற்றும் அசைவ உணவகத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருந்தது. மேற்கண்ட ஒப்பந்தம் தொடர்பான ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரால் குறிப்பிடப்பட்டிருந்த தொகை மிகக் குறைவாக குறிப்பிடப்பட்ட நிலையில், மறு ஏலம் விடப்பட்டு சைவ உணவகத்திற்கு ரூ 21,000/– ஏலத்திலும், ரூ 33,000/– மற்றும் ரூ 27,500/– என இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், அசைவ உணவகத்திற்கு ரூ 25,000/–, ரூ 27,000/– மற்றும் ரூ 27,500/– என மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, மன்ற அனுமதி பெற்று (அனுமதி நாள்.29.06.2022) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 27.05.2022 அன்று 20 பணிகளுக்கும், 15.06.2022 அன்று 2 பணிகளுக்கும் கொமாரப்பாளையம் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நகர்மன்ற கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட 22 பணிகளில், 5 பணிகள் ஸ்ரீசாய் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட ஸ்ரீசாய் டிரேடர்ஸ் உரிமையாளரும், கொமாரபாளையம் நகராட்சி நகர் மன்ற உறுப்பினர்கள் சிலரும் உறவினர்கள் என்பது குறித்தும், அதேபோன்று சைவ உணவகத்தை ஏலத்தில் எடுத்த ஏலதாரர் திரு.வெங்கடேசன் என்பவரும், மன்ற உறுப்பினர்கள் சிலரும் உறவினர்கள் என்பது குறித்தும், அவர்களது உறவுமுறை குறித்தும் எனக்கு எவ்வித தகவலும் தெரியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனது 25.08.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான கோப்புகளை இம்முறைமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, கொமாரபாளையம் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- மனுதாரர் திரு. ரங்கநாதன் தனது முறையீட்டு மனுவில் கொமாரபாளையம் நகராட்சியில் அறிவிக்கப்படும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் குறித்தான நேர்வுகளை நகராட்சி நிர்வாகத்தினரால் சரிவர கையாளப்படாமல் ஒரு சாராருக்கு மட்டும் பயன்அளிக்கும் வகையில் ஒப்பந்தப் பணிகள் வழங்கப்படுவதாகவும் மற்றும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பாணை நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பதில்லை எனவும், ஒரே நிறுவனத்திற்கு 50 சதவீத

ஒப்பந்தப் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் தனது மனுவை திரும்ப பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். இருப்பினும் அவருடைய புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் தன்மையின் அடிப்படையில் இம்மனுவினை விசாரணை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்துள்ளது.

- கொமாரபாளையம் நகராட்சியின் வாயிலாக அறிவிக்கப்படும் அனைத்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளையும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் அறியும் வண்ணம் நகராட்சியின் விளம்பரப் பலகையில் ஒட்டப்படுகிறது என்பதையும் மற்றும் ஏற்கனவே கடையினை ஏலம் எடுத்தவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்பதையும் ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

- கொமாரபாளையம் நகராட்சியால் 27.05.2022 அன்று 20 பல்வேறு பணிகளுக்கும் மற்றும் 15.06.2022 அன்று 2 பணிகளுக்கும் கோரப்பட்ட மொத்தம் 22 ஒப்பந்தப்புள்ளிகள் அறிவிப்பில் ஸ்ரீசாய் டிடேர்ஸ் என்ற நிறுவனத்திற்கு மொத்தம் 5 பணிகளுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

- கொமாரபாளையம் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள சைவ உணவகத்தை ஏலம் எடுத்த திரு. வெங்கடேசன் என்பவரும் மன்ற உறுப்பினர்கள் சிலரும் உறவினர்கள் என்பது குறித்தும் அவர்களது உறவுமுறை குறித்தும் ஆணையாளருக்கு எதுவும் தெரியாது என்பது ஆணையாளரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

- கொமாரபாளையம் நகராட்சியில் 17.05.2022 அன்று வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது நாளிதழில் விளம்பரம் செய்யப்படாமல் முறைகேடாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்யும் தருணத்தில் இம்முறைகேட்டிற்கு காரணமானவர் எழுத்தர் என, அவரிடம் மட்டும் விளக்கம் கோரும் நகராட்சி ஆணையாளரின் செயல் ஏற்புடையதல்ல. இந்நிகழ்வின் மூலம் நகராட்சி மேலாளரும் மற்றும் அப்போதைய நகராட்சி ஆணையாளரும் ஒப்பந்தப்புள்ளி குறித்தான நேர்வில் தொடக்க நிலையில் இருந்தே கண்காணிக்க தவறியுள்ளனர் என்பது ஆவணங்களின் மூலம் தெளிவாக அறியமுடிகிறது.

- கொமாரபாளையம் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள சைவ உணவக கடையினை வாடகைக்கு விடுவது குறித்து ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்தாமல் திரு.வெங்கடேசன் என்பவருக்கு ரூ 17,100/- மதிப்பீட்டில் வாடகை நிர்ணயம் செய்யும் வகையில் முறைகேடாக ஒப்பந்தப்புள்ளி பெற்று, பின்னர், மனுதாரர் உட்பட நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை செய்ததன் மூலம் ஒப்பந்தப்புள்ளி வரைமுறைகளை பின்பற்றி மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் வெளியிட்டு முன்பு பெறப்பட்ட ஒப்பந்த புள்ளியை விட ஏறத்தாழ இருமடங்கிற்கு அதாவது ரூ 33,000/- வாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. இதன் மூலம் நகராட்சிக்கு ஏற்படவிருந்த பெரும் வருவாய் இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை பின்பற்றாமல், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழில் வெளியிடாமல் முறைகேடாக ஒப்பந்தம் வழங்கிய நடவடிக்கையானது கொமாரபாளையம் நகராட்சி நிர்வாக அலுவலர்களின் பொறுப்பற்ற தன்மையும், ஒருதலை பட்சம ான போக்கு மற்றும் அலட்சியப் போக்கையும் காட்டுகிறது. எனவே, இவ்வாறு பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட அப்போதைய நகராட்சி ஆணையாளர், மேலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சி வருவாய் பிரிவு அலுவலர்கள் மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. G. ரங்கநாதன்
32வது வார்டு நகர் மன்ற உறுப்பினர்,
எண்.2A3/1E, கொத்துகாரன்காடு, பூர்ணமதி பள்ளி அருகில்,
கொமாரபாளையம் – 638 183,
நாமக்கல் மாவட்டம்.

2) ஆணையாளர், கொமாரபாளையம் நகராட்சி,
கொமாரபாளையம் – 638 183, நாமக்கல் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/9/22

செயலாளர்

14/09/22